DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI

Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.

Judicial Magistrate, Manapparai

Date: 23.07.2026

CC No. 147/2026

சாட்சி :PW4

| | |
|---|---|
| பெயர் : திரு. நல்லுச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ராமர் | தொழில் சென்டிரிங் வேலை |
| கிராமம் : தோப்புப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 37/2026 |

( எதிரி ஆஜர், எதிரி வழக்கறிஞர் ஆஜர்)

---

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கட்டுமான பணி செய்து வருகிறேன்.. அ.சா.1 அஜய் எனது அக்கா மகன் ஆவார். 18.02.2026 அன்று மாலை 05.00 மணியளவில் மணப்பாறை இரயில்வே ஆர்ச் அருகே எனது TN 48 S 9801 HERO HONDA SPLENDOR Plus இருசக்கரவாகனத்தை அஜய் நிறுத்திவிட்டு எனது மாமா ராஜேந்திரன் என்பவர் நடத்திவரும் சில்லிசிக்கன் கடையில் கல்லூரி முடிந்து அவர் பகுதிநேரமாக அங்கு வேலை செய்வதால் அந்த கடைக்கு செல்வதற்காக மேற்படி இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டு வேலை செய்துகொண்டிருந்தார் என்றும் அப்போது சுமார் 06.00 மணியளவில் அஜய் பைக் நிறுத்தியிருந்த இடத்தை பார்த்தபோது பைக்கை காணவில்லை. இது குறித்து அஜய் புகார் அளித்தார். புகார் அளித்த அன்றே 6.45 மணியளவில் போலீசார் பைக்கை பிடித்துவிட்டதாக கூறினார்கள். ஆஜர் எதிரிதான் அஜய் நிறுத்தியிருந்த இருசக்கரவாகனத்தை திருடியவர். அவரை மணப்பாறை காமராஜர் சிலை அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டுகொண்டிருந்தபோது பைக்கோடு ஆஜர் எதிரியை பிடித்து வைத்திருந்தார்கள். அந்த இருசக்கரவாகனங்களின் அடையாளங்கள் மற்றும் பதிவெண்களை பார்த்தபோது அது எங்களது வண்டிக்குரியவையாக இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. புகார்தாரர் எனது அக்கா மகன் ஆவார். கோவிந்தசாமி எனது தம்பி ஆவார். வண்டி காணாமல் போன விபரத்தை யார் சொன்னது என்றால் எனது அக்கா மகன் அஜய் போனில் சொன்னார். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் 07.00 மணிக்கு சொன்னார். மணப்பாறையிலிருந்து எனக்கு தகவல் சொன்னார். வண்டி காணாமல் போகவில்லை என்றும், வண்டியை எனது அக்கா மகன் வண்டியை தொலைத்துவிட்டு காணாமல் போனதாக பொய் புகார் கொடுத்தற்கு நான் ஆதாரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 23.07.2026 | |
| CC No. 147/2026 | |
| சாட்சி :PW5 | |
| பெயர் : திரு. ராஜேந்திரன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. கோபால் | தொழில் சிக்கன் கடை நடத்தி வருகிறேன் |
| கிராமம் : அமையபுரம் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 42/2026 |
| ( எதிரி ஆஜர், எதிரி வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் சிக்கன் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 அஜய் எனது தம்பி மகன் ஆவார். 18.02.2026 அன்று மாலை 04.30 மணியளவில் மணப்பாறை இரயில்வே ஆர்ச் அருகே TN 48 S 9801 HERO HONDA SPLENDOR Plus இருசக்கரவாகனத்தை அஜய் நிறுத்திவிட்டு நான் நடத்திவரும் சில்லிசிக்கன் கடையில் கல்லூரி முடிந்து அவர் பகுதிநேரமாக அங்கு வேலை செய்வதால் அந்த கடைக்கு செல்வதற்காக மேற்படி இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டு வேலை செய்துகொண்டிருந்தார் என்றும் அப்போது சுமார் 06.00 மணியளவில் அஜய் பைக் நிறுத்தியிருந்த இடத்தை பார்த்தபோது பைக்கை காணவில்லை. இது குறித்து அஜய் புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் எனது கடையில் வேலை செய்யும் திலக் என்பவரும் கையொப்பம் செய்தார். பைக் காணாமல் போனது தொடர்பாக மணப்பாறை போலிசார் எனது கடை அருகே வந்து பைக்கை நிறுத்தியிருந்த இடம் தொடர்பாக வரைபடம் தயார் செய்தார்கள். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் **<u>பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** புகார் அளித்த அன்றே சுமார் 6.00 மணிக்கு மேல் விராலிமலை சாலையில் போலீசார் பைக்கை பிடித்துவிட்டதாக தகவல் கிடைத்தது. நானும், திலக் என்பவரும் சென்றபோது மணப்பாறை, காமராஜர் சிலை அருகே ஆஜர் எதிரியிடம் அங்கு விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அவர் அப்போது

மணப்பாறை சந்தைக்கு வந்ததாகவும், சந்தையை முடித்துவிட்டு திரும்பி செல்லும்போது நிறுத்தியிருந்த வண்டியை எடுத்துச்சென்றுவிட்டதாக கூறினார். ஆஜர் எதிரியின் பெயர் வேலுச்சாமி என்றும், அவர் நாகமங்கலம் அருகிலுள்ள மேக்குடி என்றும், போலிசாரிடம் கூறினார். போலீசார் அதனை பதிவு செய்துகொண்டார்கள். அதில் ஆஜர் எதிரியும், நாங்களும் அங்கு வைத்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் எதிரியிடமிருந்து அவர் எடுத்துச்சென்ற வண்டியை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னோடு திலக் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் எதிரியிடமிருந்து அவர் எடுத்துச்சென்ற வண்டியை கைப்பற்றினார்கள். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் **அ.சா.பொ.1 – வாகனத்தைதான் எதிரியிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் 12–ம் வகுப்பு படித்திருக்கிறேன். கடை எத்தனை மணிக்கு வழக்கமாக ஆரம்பிப்பேன் என்றால் 4.00 மணிக்கு ஆரம்பிப்பேன். அ.சா.1 அஜய் எத்தனை மணிக்கு கடைக்கு வேலைக்கு வருவார் என்றால் சுமார் 04.00 முதல் 4.30 க்குள் வருவார். பைக் காணாமல் போன அன்று என்ன கிழமை என்றால் புதன்கிழமை. புகார்தாரர் காணாமல் போனதாக சொல்லப்படும் பைக்கை நிறுத்தியதை நான் பார்த்தேன் என்றால் நான் பார்த்தேன். பைக் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கும், எனக்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் இருக்கும். வண்டியை எனது அக்கா மகன் வண்டியை தொலைத்துவிட்டு காணாமல் போனதாக பொய் புகார் கொடுத்தற்கு நான் ஆதாரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 23.07.2026 | |
| CC No. 147/2026 | |
| சாட்சி :PW6 | |
| பெயர் : திரு. திலக் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ரமேஷ் | தொழில் கல்லூரி மாணவர் |
| கிராமம் : விடத்தலாம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 18/2026 |
| ( எதிரி ஆஜர், எதிரி வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் B.B.A படித்து வருகிறேன். அ.சா.1 அஜய் எனது மைத்துனர் ஆவார். 18.02.2026 அன்று புதன்கிழமை மாலை 04.00 மணியளவில் மணப்பாறை இரயில்வே ஆர்ச் அருகே TN 48 S 9801 HERO HONDA SPLENDOR Plus இருசக்கரவாகனத்தை அஜய் நிறுத்திவிட்டு நான் வேலை செய்யும் ராஜேந்திரன் சில்லிசிக்கன் கடையில் கல்லூரி முடிந்து அவர் பகுதிநேரமாக அங்கு வேலை செய்வதால் அந்த கடைக்கு செல்வதற்காக மேற்படி இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டு கடையில் வேலை செய்துகொண்டிருந்தார். அப்போது சுமார் 06.00 மணியளவில் அஜய் பைக் நிறுத்தியிருந்த இடத்தை பார்த்தபோது பைக்கை காணவில்லை. இது குறித்து அஜய் மணப்பாறை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் எனது மாமா ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தார். பைக் காணாமல் போனது தொடர்பாக மணப்பாறை போலிசார் நான் வேலைசெய்யும் கடை அருகே வந்து பைக்கை நிறுத்தியிருந்த இடம் தொடர்பாக வரைபடம் தயார் செய்தார்கள். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் **அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் அளித்த அன்றே சுமார் 6.00 மணிக்கு மேல் விராலிமலை சாலையில் போலீசார் பைக்கை பிடித்துவிட்டதாக தகவல் கிடைத்தது. நானும்,

மாமா ராஜேந்திரனும் சென்றபோது மணப்பாறை, காமராஜர் சிலை அருகே ஆஜர் எதிரியிடம் அங்கு விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அவர் அப்போது ஆஜர் எதிரியின் பெயர் வேலுச்சாமி என்றும், அவர் திருச்சி பஞ்சப்பூர் அருகிலுள்ள ஒரு ஊரைச்சேர்ந்தவர் என்றும், போலிசாரிடம் கூறினார். மணப்பாறை சந்தைக்கு வந்ததாகவும், சந்தையை முடித்துவிட்டு திரும்பி செல்லும்போது தனியாக நிறுத்தியிருந்த வண்டியை எடுத்துச்சென்றுவிட்டதாக கூறினார். போலீசார் அதனை பதிவு செய்துகொண்டார்கள். அதில் ஆஜர் எதிரியும், நாங்களும் அங்கு வைத்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் எதிரியிடமிருந்து அவர் எடுத்துச்சென்ற வண்டியை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னோடு ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் எதிரியிடமிருந்து அவர் எடுத்துச்சென்ற வண்டியை கைப்பற்றினார்கள். அதுதொடர்பாக போலிசார் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த **அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் **அ.சா.பொ.1 – வாகனத்தைதான் எதிரியிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் B.B.A படித்திருக்கிறேன். கடை எத்தனை மணிக்கு வழக்கமாக நான் வருவேன் என்றால் 4.00 மணிக்கு வருவேன். அ.சா.1 அஜய் எத்தனை மணிக்கு கடைக்கு வேலைக்கு வருவார் என்றால் சுமார் 04.00 முதல் 4.30 க்குள் வருவார். பைக் காணாமல் போன அன்று என்ன கிழமை என்றால் புதன்கிழமை. புகார்தாரர் காணாமல் போனதாக சொல்லப்படும் பைக்கை நிறுத்தியதை நான் பார்த்தேன் என்றால் நான் பார்த்தேன். பைக் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கும், எனக்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் இருக்கும். வண்டியை எனது மைத்துனர் வண்டியை தொலைத்துவிட்டு காணாமல் போனதாக பொய் புகார் கொடுத்தற்கு நான் ஆதாரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 23.07.2026 | |
| CC.No. 147/2026 | |
| சாட்சி : PW7 | |
| பெயர் : திருமதி. லியோனியா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மார்டின் ரூபன் | தொழில் : காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் : மணப்பாறை | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 31/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது புத்தாநத்தம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அயல்பணியாக மணப்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் மணப்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். நான் கடந்த 18.02.2026 ம் தேதியன்று மணப்பாறை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது மாலை 06.00 மணியளவில் அமையபுரத்தைச் சேர்ந்த அஜய் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் மணப்பாறை காவல் நிலைய குற்ற எண்.78/2026, U/s. 303(2)BNS பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்தேன். தொடர்ந்து இவ்வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் மாலை 07.15 மணியளவில் சம்பவ இடமான மணப்பாறை, ரயில்வே ஆர்ச் அருகே சென்று சாட்சிகள் ராஜேந்திரன், திலக் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் அஜய், மணிகண்டன், கோவிந்தசாமி, நல்லுச்சாமி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. சம்பவ இடத்தை பார்வையிட்டத்தில் இருந்தும் சாட்சிகளின் விசாரணையில் இருந்தும் எனது ரகசிய புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேடி துப்பு வைக்கப்பட்டதில் அன்றையதினமே 21.30 மணியளவில் மணப்பாறை காமராஜர் சிலை அருகே வாகனத்தணிக்கை

செய்தபோது சந்தேகத்திற்கு இடமாக அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரிக்க அவர் அங்கிருந்த சாட்சிகள் ராஜேந்திரன், திலக் ஆகியோர்கள் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி தான் திருச்சி மாவட்டம், நாகமங்கலம் அடுத்த, மேக்குடியைச் சேர்ந்தவர் என்றும் சென்ட்ரிங் வேலை செய்வதாகவும், அவருக்கு குடிபழக்கம் இருப்பதால், ஒரு கொலை வழக்கில் சிறையில் இருந்ததாகவும், அதன்பிறகு அவர் வழிப்பறி சம்பவங்களிலும் ஈடுபட்டதாகவும், அதுதொடர்பாக அவர்மீது வழக்குகள் இருந்ததாகவும், மணப்பாறையில் மாட்டு சந்தைக்கு ஆடு வந்ததாகவும், சந்தை முடிந்ததால் மணப்பாறை ரயில்வே ஆர்ச் அருகே வந்தபோது தனியாக நிறுத்தியிருந்த TN 48 S 9801 என்ற Hero Honda Splendor Plus என்ற வாகனத்தை சைடு லாக்கை உடைத்து விராலிமலை ரோட்டில் சென்றதாக வாக்குமூலம் அளித்தார். அதன்படி அவர் வைத்திருந்த திருடிய வாகனத்தை என் வசம் ஒப்படைத்தார். அவற்றை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் நான் தயார் செய்ததுதான். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனத்தை அன்றைய தினம் 22.30 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மற்ற வழக்கு சம்மந்தப்பட்ட பொருள்களை தனியாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ராஜேந்திரன், திலக் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 இருசக்கர வாகனத்தைதான் எதிரி ஆஜர் செய்ய நான் கைப்பற்றினேன். எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 19.02.2026-ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.